# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்
## தயாரிப்பு மற்றும் பணிகள்

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA


**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2025 திசெம்பரில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிலும் விரிவடைதல்களை எடுத்துக்காட்டுகின்றன**

**தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), 2025 திசெம்பரில் 60.9 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்து, தயாரிப்பு நடவடிக்கைகளில் தொடர்ந்தும் விரிவடைதலொன்றை எடுத்துக்காட்டியது.** மாதத்தின் தொடக்கத்தில் எதிர்கொண்ட மோசமான வானிலையுடன் தொடர்புடைய இடையூறுகளுக்கு மத்தியில், பிரதானமாக பருவகால கேள்வியினால் துணையளிக்கப்பட்டு, இவ் அதிகரிப்பு அனைத்து துணைச் சுட்டெண்களுக்கும் சாதகமாக பங்களித்திருந்தது.

கொ.மு.சு தயாரிப்பு **60.9**
2025 திசெம்பர்

உணவு மற்றும் குடிபானங்கள் துறையின் உற்பத்தியினால் தூண்டப்பட்டு, புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியின் துணைச் சுட்டெண்கள் திசெம்பரில் அதிகரித்தன. மேலும், மாதகாலப்பகுதியில் புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியில் அவதானிக்கப்பட்ட வலுப்படுத்தலுக்கமைவாக, தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்புக்களின் துணைச் சுட்டெண்களும் அதிகரித்தன. நிரம்பலர்களின் விநியோக நேரம் திசெம்பரில் மேலும் விரிவடைந்து, பிரதானமாக உள்ளீட்டுப் பொருட்களுக்கான அதிகரித்த கேள்வியையும் மோசமான வானிலையுடன் தொடர்புடைய ஏற்பாட்டு தாமதங்களையும் பிரதிபலித்தன.

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு**



மூலம்: இலங்கை மத்திய வங்கி

***கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு***

| மாறி | நவெ. | திசெ. | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | **55.5** | **60.9** | **+** | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 58.5 | 63.8 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 50.0 | 61.2 | + | நடுநிலையிலிருந்து அதிகரிக்கின்றது |
| தொழில்நிலை | 55.5 | 58.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 57.0 | 53.7 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 57.7 | 62.5 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பொருளாதார நிலைமைகளில் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றங்களின் மூலம் துணையளிக்கப்பட்டு, அடுத்தவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் சாதகமாகக் காணப்படுகின்றன.

**உலகளாவிய தோற்றப்பாடு:**
**கொமுசு தயாரிப்புத் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| **உலகம்** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| **இந்தியா** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| **சீனா** | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| **ஐக்கிய அமெரிக்கா** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| **ஐக்கிய இராச்சியம்** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **யூரோ வலயம்** | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2026 சனவரி 16 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1]எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் பணிகள் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க விரிவடைதலொன்றை எடுத்துக்காட்டி, 2025 திசெம்பரில் 67.9 சுட்டெண் பெறுமதியொன்றைப் பதிவுசெய்தது.**

மாதத்தின் தொடக்கத்தில் எதிர்கொண்ட மோசமான வானிலையுடன் தொடர்புடைய இடையூறுகளுக்கு மத்தியிலும், 2025 திசெம்பரில் வியாபார நடவடிக்கைகளின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியானது பெரும்பாலான துறைகளின் வலுவான செயலாற்றத்தினால் தூண்டப்பட்டிருந்தது. பண்டிகை பருவகால கேள்விக்கு மத்தியில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் இவ்விரிவாக்கத்தின் முதன்மையான தூண்டுதலாக இருந்தது. ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகள், மற்றும் தங்குமிடம், உணவு மற்றும் குடிபான பணி நடவடிக்கைகள் என்பனவற்றுடன் தொடர்புடைய வியாபார நடவடிக்கைகளிலிருந்தான சாகமான பங்களிப்புக்களின் மூலமும் மேல்நோக்கிய போக்கிற்கு ஆதரவளிக்கப்பட்டது.

வலுவடைந்த நிதியியல் பணிகள் நடவடிக்கைகளுடன் இணைந்து மொத்தவிற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்தில் மேம்பட்ட நடவடிக்கை என்பன மூலம் துணையளிக்கப்பட்டு 2025 திசெம்பரில் புதிய வியாபாரங்கள் அதிகரித்தன.

ஆண்டிறுதியில் தொழிற்பாட்டுத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான நிறுவனங்கள் மேற்கொண்ட தொழிற்படை விரிவாக்கத்தைப் பிரதிபலித்து, 2025 திசெம்பரில் தொழில்நிலை தொடர்ந்தும் அதிகரித்தது. அதேவேளை, நிலுவையிலுள்ள பணிகள் தொடர்ந்தும் இரண்டாவது மாதத்திற்கும் அதிகரித்தன.

***கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு***


| மாறி | நவெ. | திசெ. | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **50.5** | **67.9** | **+** | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| புதிய வியாபாரங்கள் | 53.6 | 64.6 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 55.7 | 52.6 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 51.1 | 53.8 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 63.3 | 75.3 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சாதகமான பேரண்டப்பொருளாதார நிலைமைகளினதும் பருவகால சுற்றுலாவுடன் தொடர்புடைய காரணிகளினதும் கூட்டிணைவு அத்துடன் அண்மைய வானிலையுடன் தொடர்புடைய இடையூறுகளைத் தொடர்ந்து தொழிற்பாடுகள் படிப்படியாக இயல்புநிலைக்கு திரும்புதல் போன்றவற்றினால் துணையளிக்கப்பட்டு, அடுத்த காலாண்டில் வியாபார நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் பெரும்பாலும் சாதமாக காணப்படும்.

**கொ.மு.சு**
**பணிகள்**
**வியாபார நடவடிக்கைச் சுட்டெண்**
**2025 திசெம்பர்**
**67.9**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| யூரோ வலயம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்', 2026 சனவரி 16 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.

பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.